ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1620/5 - 2009 සැප්තැම්බර් 22 වැනි අඟහරුවාදා - 2009.09.22

1620/5 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம்*

*26 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் அதே சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கும் வகையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிய 1386/24 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 9 ஆவது ஒழுங்குவிதி இத்தால் நீக்கப்படுவதுடன், பின்வரும் பந்தி அதற்கு பதிலீடு செய்யப்படும் என கட்டளை ஆக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2009, ஓகத்து 31.*

**ஒழுங்குவிதிகள்**

*9. ஒவ்வோர் உள்நாட்டுப் ப. ஆ. தொ. வ. இயக்குநரும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, இலங்கையில் சேவையளிக்கப்படாத மற்றும் குறைவாகச் சேவையளிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது தொலைத்தொடர்புகள் வலைப்பின்னலின் அபிவிருத்திக்காக தொ. அ. இ. நிதிகளின் மூன்றிலிரண்டு பங்கைக் கோரலாம். ஒவ்வோர் உள்நாட்டுப் ப. ஆ. தொ. வ. இயக்குநரும், தமது தனிப்பட்ட பெயரில் செய்யப்பட்ட தொ. அ. இ. கொடுப்பனவுகளை மாத்திரமே கோருவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய இயக்குநர் மூன்றாண்டுக் காலப்பகுதியினுள் நடப்பாண்டின் தொ. அ. இறுப்பனவின் மூன்றிலிரண்டு பங்கைக் கோருவதற்கு தகவுடையவராதல் வேண்டும். இதற்கு விதிவிலக்காக, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் தொடர்பில் அத்தகைய இயக்குநர் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரைக்குமான கோரிக்கைகளைப் பெறுவதற்கு தகைமை பெற்றவராக இருப்பார்.*

**அட்டவணை**

| I<br>ஆண்டு | II<br>காலம் | III<br>கோரிக்கைக்கான இறுதித் திகதி | IV<br>திரட்டு நிதியில் வைப்புச் செய்வதற்கான இறுதித் திகதி |
|---|---|---|---|
| 2003 | 03.03.2003 - 31.03.2004 | 31.03.2009 | 31.12.2009 |
| 2004 | 01.04.2004 - 31.03.2005 | 31.03.2009 | 31.12.2009 |
| 2005 | 01.04.2005 - 31.03.2006 | 31.12.2009 | 31.12.2010 |
| 2006 | 01.04.2006 - 31.03.2007 | 30.09.2010 | 31.12.2010 |
| 2007 | 01.04.2007 - 31.03.2008 | 31.12.2010 | 31.03.2011 |

18 ஆம் ஒழுங்குவிதியில் ஏதேனுமொரு விடயம் வேறு விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி, மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட தொ. அ. இ. நிதியில் எவையேனும் செலவழிக்கப்படாத வரும்படிகள் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட திகதி யன்று அல்லது அதற்கு முன்னர் திரட்டு நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

10- 270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.